**சனாதிபதி நிதியம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சனாதிபதி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் விசேட அதிகாரத்திற்கிணங்க கொடுக்கல் வாங்கல்கள் நிறைவேற்றப்பட்டது எனவும் பிரயோகிக்கக்கூடிய அறிக்கையிடல் நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அனுமதிப்பதற்கும் அவசியமாக கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததும் எனவும் சொத்துக்களிற்கான கணக்களிப் பொறுப்பை பேணுவதற்கும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது விசேட அங்கீகாரத்திற்கு இணங்க மாத்திரம் சொத்துக்களை அணுகுவதை அனுமதிப்பதற்கும் மற்றும் தற்போதுள்ளவாறான சொத்துக்களுடன் நியாயமான இடைவெளிகளில் மற்றும் பொருத்தமான நடவடிக்கை ஏனைய வேறுபாடுகளுடன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டும் என்பவற்றையும் நியாயமாக உறுதிப்படுத்துவதற்கு உள்ளகக் கணக்கீட்டு போதியளவு கட்டுப்பாடுகளிற்கு “திட்டமிடுதல் மற்றும் பராமரிப்பு” என்ற முறைமையொன்று நிறுவகத்திற்கு தேவைப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தினால் நலன்புரி கொடுப்பனவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக முறையான அடிப்படையொன்று அல்லது முறைமையொன்று அல்லது முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பாக திட்ட முறைமையொன்று தற்போது செயற்படுத்தப்படுவதில்லை. கொடுப்பனவுகளுக்காக அதிமேதகு சனாதிபதி அவர்களின் விஷேட அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஆ) | நிதியத்தினால் பேணிச் செல்லப்படுகின்ற புத்தகங்கள் மற்றும் ஏடுகளைப் பரீட்சித்த போது அந்தப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் சரியாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்வதற்கு தவறிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் கணக்கு புத்தகங்கள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 17(5) ஆம் பிரிவின் பிரகாரம் உரித்து கோரப்படாத பரிசுகள் 06 மாதங்களை கடந்ததன் பின்னர் நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். எனினும் அபிவிருத்தி லொத்தர் சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான 04 வருட கால வீச்சில் அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய பொருட்களின் பெறுமதி ரூபா 24,948,809 | அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 18(3) ஆம் பிரிவின் பிரகாரம் பரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்கு 06 மாதங்களுக்குள் முன்வராத விடத்து அந்த பரிசுகள் விஷேட மேம்படுத்தல் லொத்தருக்காக பயன்படுத்தப்படுவதாக சபையின் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் பரிசு பணம் கணக்கு வைக்கமுடியாதுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மற்றும் அரசுடமையாக்கப்பட்ட காசு நன்கொடை ரூபா 45,308,050 தொகை என்பன அறவிட வேண்டியதாக கணக்கீடு செய்யப்படவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் வட்டி வருமானம் ரூபா 217,500,880 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 223,654,927 ஆக இருந்தமையின் காரணமாக வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 6,154,047 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. அப்பெறுமதியில் ரூபா 5,195,872 தொகையான வட்டி வருமானம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டமை, ரூபா 68,918 தொகையான வட்டி வருமானம் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் ரூபா 1,027,093 தொகை இனங்காணப்படாத வேறுபாடு உள்ளடங்கியிருந்தது. | இலங்கை வங்கியின் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தில் பெற வேண்டிய வட்டி சரியான முறையில் காண்பிக்கப்பட்டமை அவதானிக்கப்படாமையினால் இந்த தொகை குறைவாக பதியப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இந்தியாவின் பிரதி தூதுவர் அலுவலகத்தில் பேணிச் செல்லப்பட்ட ரூபா 6,000,000 கட்டு நிதியில் மீளாய்வாண்டில் ரூபா 2,000,000 தொகையான செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் அது ஆண்டின் செலவினமாக இனங்கண்டு கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரு கட்டுநிதி மீதி ரூபா 2,000,000 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2,000,000 தொகையான செலவினம் 2019 ஆண்டின் போது மீளளிப்பு செய்யப்பட்டமையால் 2018.12.31 இல் உள்ளவாறு செலவினமாக கணக்கீடு செய்யும் இயலுமை காணப்படவில்லை. | மீளாய்வாண்டிற்குரிய சகல தகவல்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.5.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஒக்தோபர் 01 முதல் 2018 திசெம்பர் 31 அந் திகதி வரை நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவுகளுக்காகவும் நிதியத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரம் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. | 2018 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2018 திசெம்பர் 31 அந் திகதி வரை ஒவ்வொரு கொடுப்பனவுகளுக்காகவும் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2019 ஒக்தோபர் 18 ஆந் திகதி நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நிதியத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுகல கொடுப்பனவுகளுக் காகவும் நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1978 இன் 07 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவு | நிதியத்தின் நிர்வாக சபைக்காக சனாதிபதியினால் இரண்டு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 யூலை வரையிலும் ஒரு அங்கத்தவர் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந் தார். | நிர்வாக சபைக்காக அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற பிரதிநிதிகள் அதிமேதகு சனாதிபதியின் விருப்பத்தின் பேரிலேயே நியமிக்கப்படுகின்றனர். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 254,920,004 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 76,972,038 பற்றாக்குறையாக இருந்தது. அதன் பிரகாரம் செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 331,892,042 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்தின் அதிகரிப்பு ரூபா 874,575,421 தொகை அதாவது 56 சதவீதம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் செலவினங்களில் அதிகரிப்பு ரூபா 542,683,379 ஆக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் முக்கிய பகுப்பாய்வுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் பிரதான வருமான மூலமான அபிவிருத்தி லொத்தர் சபையின் கிடைப்பனவுகள் மற்றும் வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 1,685,.9 மிலலியனலும்மற்றும் ரூபா 15.21 மில்லியனாலும் அதாவது 336 சதவீதத்தாலும், 7.5 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் ஏனைய தரப்பினரின் பங்களிப்பு கிடைப்பனவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 53.7 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நியத்தால் வைத்திய உதவி, நலன்புரி செயற்பாடுகள், கலாசார நடவடிக்கைகள், மத அலுவல்கள், கல்வி நடவடிக்கைகள், விளையாட்டு மற்றும் கலைச் செயற்பாடுகள் மற்றும் உள்நாட்டு புலமைப்பரிசில் மானியங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 1,270.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அப்பெறுமதி மொத்த செலவினத்தின் சதவீதமாக கருதுவோமாயின் 58 சதவீதமாக இருந்தது.

(இ) நலன்புரி நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள் மற்றும் கல்விசார் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 80 சதவீதத்தினாலும், 220 சதவீதத்தினாலும் மற்றும் 143 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்ததுடன் மருத்துவ உதவி, விளையாட்டு, கலை நடவடிக்கைகள் மற்றும் புலமைப்பரிசில் மானியம் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 13 சதவீததம், 90 சதவீதம் மற்றும் 63 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஈ) மீளைய்வாண்டின் போது இருதய சத்திர சிகிச்சை, புற்று நோய், சிறுநீரக நோய், மூளை சார்ந்த மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்காக 6,080 நோயாளிகளுக்காக ரூபா 1,149.02 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் போது 8,873 நோயாளர்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,354.13 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மருத்துவ உதவி பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை 2,787 இனால் அதாவது 31 சதவீதத்தாலும், மருத்துவ செலவினம் ரூபா 205.11 மில்லியன் இனாலும் குறைவடைந்திருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 1,745 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,543.52 தொகையான முதலீடு மீளப் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முதலீட்டு பெறுமதியில் ரூபா 201.48 மில்லியன் தொகையான அதிகரிப்பை காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானமும் ரூபா 15.21 மில்லியன் அதிகரித்திருந்தது. இதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் வட்டி சதவீதம் உயர்வடைந்தமையும் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தால் உயர்தரம் கல்வி கற்கின்ற குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்காக புலமைப் பரிசில் முன்மொழிவுத் திட்டமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அந்த உத்தேச திட்டத்தின் மூலம் உயர் நடனம் மற்றும் நாடனக் கல்லூரியில் பாடநெறியொன்றை பின்பற்றுவதற்காக மாணவர் ஒருவர் அல்லாத நடனம் பயிற்சியாளருக்கு ரூபா 500,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அது புலமைப்பரிசில் உத்தேச திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் 50 சதவீத பங்களிப்பான ரூபா 250,000 தொகை மஹப்பொல உயர் கல்வி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் செலவினங்கள் செய்யவேண்டியிருந்ததுடன் உரிய பிரகாரம் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் பிரதான வருமான மூலமான அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து கிடைப்பனவுகளில் 50 சதவீதம் மஹப்பொல புலமைப் பரிசில் நிதியத்திற்கு செலுத்தப்படுவதாக மீளாய்வாண்டின் கணக்கீட்டுக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய சட்ட ரீதியான இணக்கப்பாடு காணப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | சட்ட ரீதியான அடிப்படையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதியத்தின் நிர்வாக சபையினால் ஒவ்வொரு நோய்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி விஷேட அங்கீகாரத்தின் அடிப்படையில் 18 நோயாளர்களுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 18,730,942 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த மிகை 38 நோயாளர்களுக்காக செலுத்தப்பட்ட மொத்தத் தொகையில் 63 சதவீதமாக இருந்தது. | அதி மேதகு சனாதிபதியின் விஷேட அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டியதாக காண்பிக்கப்பட்ட ரூபா 161,000,000 தொகையான கடன் மீதி தொடர்பாக இலங்கை பொதுத்துறை | நிதிக் கூற்றுக்களில் 4(V) பந்தியில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் பரிசீலனை செய்து அதற்குரிய சகல தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் போதியளவான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (உ) | மீளாய்வாண்டின் போது நிதியத்தால் மருத்துவ உதவி செலுத்துவதற்காக ரூபா 1,178.69 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் மக்களின் பிரதி நிதியாக தெரிவு செய்யப்பட்டு இருக்கின்ற மற்றும் அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கின்ற 16 உத்தியோகத்தர்களுக்காக விஷேட அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 7 மில்லியன் தொகையும், நோயுற்ற மக்களின் 6,070 மருத்துவ உதவி தேவைகளுக்காக ரூபா 1,142 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது. மேலும் தனியார் நிறுவனம் மற்றும் வைத்தியசாலைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 29.67 மில்லியன் தொடர்பாக நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் பெறுமதி தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தது. | சனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபையின் தலைவரான அதிமேதகு சனாபதியின் விஷேட அங்கீகாரத்தின் அடிப்படையில் மக்கள் பிரதிநிதிகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. பட்டியல்களின் பெறுமதியை தனியாக இனங்காண்பதற்கு கணனி மூலம் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2015 ஆம் ஆண்டின் போது எஸபெஸ்டோஸ் இற்கு மாற்று வழியொன்றை அறிமுகப்படுத்துவதற்கு ஆராய்ச்சி மேற்கொள்கின்ற நபர்களுக்கு பரிசு கையளிப்பதற்கு நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்காக நன்கொடையாகக் கிடைத்த ரூபா 100,000 தொகை தொடர்பாக உரிய மிகுதி நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. | உரிய பிரிவுகளில் விசாரணை செய்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும். |